தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 30/பேரூ/2021

நாள் 14.12.2021

திரு. M. ராஜசேகரன்
பொத்தனூர், நாமக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
P வேலூர் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் (மற்றும்) அஞ்சல், நெ.27/8 கிழக்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் என்பவரின் 05.04.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.4.2021ல் பெறப்பட்டு, 30/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் (மற்றும்) அஞ்சல், நெ.27/8 கிழக்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் என்பவரின் 05.04.2021 நாளிட்ட முறையீட்டு மனுவில் P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் கட்டிட உரிமம் எண்.22/2020–2021 நாள் 13.08.2020ல் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.493/22ல் திரு. கார்த்திக், த/பெ. கோபாலன் என்பவருக்கு தரைதளம் 674.29 சதுரஅடி மற்றும் முதல் தளம் 674.29 சதுர அடி வசிப்பிடத்திற்கு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி அளித்துவிட்டு அதில் “நாச்சியார் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனை” என்ற பெயரில் மருத்துவமனையும் மற்றும் பல் மருத்துவமனையும் செயல்பட பேரூராட்சியால் அனுமதிக்கப்பட்டுள்ளது. முறையான வணிக அனுமதியின்றி செயல்படும் நாச்சியார் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனை குறித்து பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு 21.3.2021 அன்று மனு அனுப்பியதாகவும் அதற்கு P.வேலூர் செயல் அலுவலரிடமிருந்து எந்தவிதமான பதிலும்

தமக்கு வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ஸ்ரீ செல்லாண்டியம்மன் ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் ஆகியவற்றின் நிலை குறித்து தான் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் 1.3.2021 நாளிட்ட விண்ணப்பத்தில் கோரிய விவரங்ளுக்கு பேரூராட்சியின் கடித எண்.88/2021/A1 நாள் 26.3.2021ல் வழங்கப்பட்ட பதிலறிக்கையில் P.வேலூர் பேரூராட்சியால் மேற்கண்ட கட்டிடங்களுக்கு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்று பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உரிய அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள மேற்படி கட்டிடங்களை இயங்க அனுமதித்த பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கோரியும், பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள "நாச்சியார் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனை" என்ற பெயரில் இயங்கிவரும் மருத்துவமனையையும் மற்றும் பல் மருத்துவமனையையும் அகற்றிடவும் மற்றும் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீ செல்லாண்டியம்மன் ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் ஆகிய கட்டிடங்களை அகற்றிடவும் ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 09.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 12.7.2021 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு. M. ராஜசேகரன் அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 09.8.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"நாமக்கல் மாவட்டம், வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி வடக்குத் தெரு, திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள நாச்சியார் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனை பல் மருத்துவமனை மருத்துவ சட்டத்தின்படி உரிய அனுமதியினை பெற்று மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட மருத்துவமனைக்கான உரிய கட்டட அனுமதி மருத்துவமனை நிர்வாகத்தினால் பெறப்பட்டுள்ளதா என்கின்ற விவரத்தை பேரூராட்சியின் பதிவேடுகளை சரிபார்த்த பின்னர் அதன் விவரங்களை இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். மேலும், ஸ்ரீ செல்லாண்டி ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் ஆகியவற்றிற்கு நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் கட்டிட உரிமம் பெறப்படாதது நேரடி ஆய்வின் மூலம் தெரியவருகிறது. மேற்கண்ட ஸ்ரீ செல்லாண்டி ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் ஆகியவற்றின் அளவுகள் எனக்கு சரிவர தெரியவில்லை. எனவே, மேற்கண்ட அறைகள் மற்றும் திருமண மண்டபத்தை அளந்து அதன் அளவுகளை இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பிக்க ஒருவார கால அவகாசம் அளிக்கும்படியும், மேற்கண்டவற்றின் விவரங்களை அடுத்த விசாரணையின்போது ஆஜராகி எனது விரிவான விளக்கத்தை அளிக்கிறேன் எனவும் இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. மேலும் P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் 09.08.2021 நாளிட்ட நேரடி விசாரணையின்போது தனது கைபட எழுதி அளித்துள்ள கடிதத்தில் நாமக்கல் மாவட்டம், வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட 13–வது வார்டு வடக்குத் தெரு, திருவள்ளுவர் சாலை பகுதியில் சர்வே எண்.5, 5(1), 5(2) (பழைய கதவு எண்)–ல் உள்ள இடத்தில் கூடுதலாக தரைதளம் 674.29 சதுர அடி மற்றும் முதல் தளம் 674.29 சதுர அடி அளவில் வணிக பயன்பாட்டிற்காக திரு. கார்த்திக் என்பவர் வேலூர் பேரூராட்சி கட்டிட வரைபட அனுமதி பெற்று, கட்டிடம் கட்டி மருத்துவமனை நடத்தி வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் மருத்துவமனைக்கு உண்டான சான்றுகள் அனைத்தும் உரிய துறை அலுவலகங்களில் பெறப்பட்டு மருத்துவமனை நடத்தி வருகிறார் என்ற விவரத்தினையும் தெரிவித்துள்ளார். மேலும், செல்லாண்டி அம்மன் ரூம்ஸ் மற்றும் கல்யாண மண்டபம் சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி மண்டபம் மற்றும் விடுதிகளுக்கு முறையாக அனுமதி பெறுவதற்கு மனுதாரருக்கு அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படாத வண்ணம் முறையாக கட்டிடத்தை அளந்து சொத்துவரி விதித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினையும் தெரிவித்துள்ளார்.

4. செயல் அலுவலர், P.வேலூர் அளித்துள்ள வாக்குமூலத்தின்படி மறு விசாரணை தேவையென முறைமன்ற நடுவர் கருதியதன் அடிப்படையில், மேற்கண்ட முறையீட்டு மனு எண்.30/2021ன் மீதான மறு விசாரணையை 14.09.2021ல் மேற்கொள்ளலாமென உத்தேசிக்கப்பட்டு, P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 14.09.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 23.8.2021 நாளிட்ட அழைப்பாணைகள், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. மறு வாய்ப்பு அளிக்கப்பட்டபோதும், மனுதாரர் திரு. எம். இராஜசேகரன் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. எதிர்மனுதாரரான பரமத்தி வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் 6.9.2021 அன்று மற்றொரு விசாரணைக்கு ஆஜராகுமாறு பணிக்கப்பட்டு, அன்றையதினம் அவர் அவ்விசாரணையில் கலந்துகொண்டபோது, இம்முறைமன்ற அனுமதியுடன் இம்முறையீட்டு மனு எண்.30/2021க்கான தனது வாக்குமூலத்தினையும் 6.9.2021 அன்றே சமர்ப்பித்துள்ளார்.

5. நாமக்கல் மாவட்டம், P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 06.9.2021 அன்று முறையீட்டு மனு எண்.30/2021 மீது அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "நாமக்கல் மாவட்டம் வேலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வடக்குத் தெரு, திருவள்ளுவர் சாலை பகுதியில் கதவு எண்.5(1) மற்றும் 5(2)ல் உள்ள பழைய கட்டிடத்திற்கு சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் அக்கட்டிடத்துடன் கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் அமைந்துள்ள நாச்சியார் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனைக்கும் வணிக பயன்பாட்டிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விதிக்கப்பட்டு பேரூராட்சியால் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக எனது 6.9.2021 நாளிட்ட விரிவான அறிக்கை மற்றும் சொத்துவரி தொடர்பான இரசீதின் நகல் ஆகியவற்றை இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்துடன் அளித்துள்ள 06.9.2021 நாளிட்ட அறிக்கையில் திரு. M. ராஜசேகரன் அவர்களின் 5.4.2021 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி நாமக்கல் மாவட்டம் P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 13-வது வார்டு, வடக்குத் தெரு, திருவள்ளுவர் சாலை பகுதியில் கதவு எண்.5(1), 5(2)-இல் 642 சதுர அடி பரப்பளவில் பழைய கட்டிடம் உள்ளது. மேற்காணும் கட்டிடத்திற்கு வரி விதிப்பு எண்.4974 மற்றும் 4975 மூலம் சொத்துவரி செலுத்தி வருகிறார். இந்நிலையில், கூடுதலாக தரைதளம் 674.29 சதுர அடி மற்றும் முதல் தளம் 674.29 சதுர அடி அளவில் வணிக பயன்பாட்டிற்காக திரு. கார்த்திக் என்பவர் வேலூர் பேரூராட்சி கட்டிட வரைபட அனுமதி பெற்று, கட்டிடம் கட்டி மருத்துவமனை நடத்தி வருகிறார். இக்கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பு எண்.9188, 9189, 9190-இன் மூலம் வணிக பயன்பாட்டிற்கான சொத்துவரி செலுத்திவருகிறார். மேலும் மருத்துவமனைக்கு உண்டான சான்றுகள் அனைத்தும் உரிய துறை அலுவலகங்களில் பெறப்பட்டு மருத்துவமனை நடத்தி வருகிறார் என்று தெரிவித்துத்துள்ளார். மேலும், இக்கட்டிடத்தின் சொத்துவரி கணக்கீட்டுப் படிவம், வரைபட அனுமதி மற்றும் இரசீதுகளின் நகல்கள் ஆகியவற்றையும் தமது அறிக்கையுடன் இணைத்துள்ளார். மேலும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு இயங்கிவருகிறது. மேற்படி மண்டபம் மற்றும் விடுதிகளுக்கு முறையாக அனுமதி பெறுவதற்கு மனுதாரருக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தற்காலிக மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்டு, நிரந்தர மின் இணைப்பு எண்.587 நாள் 31.5.2018-இல் வழங்கப்பட்டுள்ளது.

7. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களது வாக்குமூலங்கள், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள்அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- ❖ மனுதாரரது புகார்கள் குறித்து, P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலம் மற்றும் அறிக்கையின்படி நாச்சியார் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனை மற்றும் பல் மருத்துவமனை மருத்துவச் சட்டத்தின்படி உரிய அனுமதியினை பெற்று செயல்பட்டு வருகிறதென்பதும், வணிக பயன்பாட்டிற்காக திரு. கார்த்திக் என்பவர் P.வேலூர் பேரூராட்சி கட்டிட வரைபட அனுமதி பெற்று, கட்டிடம் கட்டி மருத்துவமனை நடத்தி வருகிறார் என்பதும் தெளிவாகிறது.
- ❖ சொத்துவரி விதிப்பு எண்.9188, 9189, 9190-இன் மூலம் வணிக பயன்பாட்டிற்கான சொத்துவரியையும் திரு. கார்த்திக் என்பவர் செலுத்திவருகிறார் என்பதும் ஊர்ஜிதமாகிறது
- ❖ மேலும், மருத்துவமனைக்கு உண்டான சான்றுகள் அனைத்தும் உரிய துறை அலுவலகங்களில் பெறப்பட்டு மருத்துவமனை நடத்தி வருகிறார் என்பதும்

P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

- ஸ்ரீ செல்லாண்டி அம்மன் ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டி அம்மன் திருமண மண்டபம் ஆகியவற்றிற்கு நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் கட்டிட உரிமம் பெறப்படாதது நேரடி ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டு கட்டிட உரிமையாளருக்கு முறையாக அனுமதி பெறக்கோரி P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி மூலம் அறிவிப்புக் கடிதம் ந.க.எண்.322/2020 நாள் 23.10.2020 மற்றும் ந.க.எண்.13/2021 நாள் 07.01.2021ல் அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாக P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் 23.04.2021 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8.** மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், நாமக்கல் மாவட்டம், P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 13வது வார்டு, வடக்குத் தெரு, திருவள்ளுவர் சாலைப் பகுதியில் கதவு எண்.5(1) மற்றும் 5(2)ல் அமைந்துள்ள நாச்சியார் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனை முறையாக அனுமதிபெற்று, வணிக பயன்பாட்டிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருவதாக P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளதை ஏற்கலாமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனினும், ஸ்ரீ செல்லாண்டியம்மன் ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் ஆகியவற்றிற்கு முறையாக நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி உரிமம் பெறப்படாத நிலையில், அதன் உரிமையாளருக்கு 23.10.2020ல் அறிவிப்பு நோட்டீஸ் மட்டுமே வழங்கிவிட்டு, அதன் மீது P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தொடர் நடவடிக்கை ஏதும் இதுவரை மேற்கொள்ளாமல் இருப்பது ஏற்கத்தக்கதல்ல. இதனை இம்முறைமன்ற நடுவம் கண்டிக்கிறது. ஸ்ரீ செல்லாண்டியம்மன் ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் கட்டி ஐந்தாண்டுகளுக்கு மேலான நிலையிலும், அதற்கு முறையான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கத் தவறியது P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்களது கடமைதவறிய செயலாகும். மேலும், இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற புகார் வரும் முன்னரே பேரூராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கத்தவறியது வருந்தக்கூடிய, கண்டிக்கத்தக்க நிகழ்வு. செல்லாண்டியம்மன் திருமண மண்டபத்தின் மீதும் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததும் கண்டிக்கத்தக்கது. இனிவரும் காலங்களில் இந்த மெத்தனம் தவிர்க்கப்படவேண்டும் என்று இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. முறையாக அனுமதி பெறுவதை கண்காணிக்கத் தவறிய செயலக்குக் காரணமான P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், ஸ்ரீ செல்லாண்டியம்மன் ரூம்ஸ் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருமண மண்டபம் ஆகியவற்றிற்கு நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதிபெற்று, அதன் அடிப்படையில் அதற்கு வணிக நோக்கத்திற்கான சொத்துவரியை வசூலித்து பேரூராட்சி கணக்கில்

சேர்த்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 14– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு M. ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு, பொத்தனூர் மற்றும் அஞ்சல், நாமக்கல் மாவட்டம்– 638 181.

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)

செயல் அலுவலர்,
P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்–638 182

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்